# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:144** **தேதி:-08.12.2016**

**BSNL தேர்வுகளிலும் அரசியல் தலையீடு மற்றும் சில செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

JEக்களுக்கான நேரடி நியமன தேர்வு சமீபத்தில் நடைபெற்று முடிவுகளும் வெளியாகிவிட்டது. ஆனால் பணி நியமனத்திற்கான மூலச் சான்றிதழ்களை பரிசீலித்தல் உள்ளிட்ட மேல் நடவடிக்கைகள் ஏதும் நடைபெற வில்லை. இது தொடர்பாக பல விசாரணைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இது தொடர்பாக 07.12.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS, ஆகியோர் GM(Rect & Trg) திருமிகு அனிமா ராய் அவர்களை சந்தித்து விவாதித்தனர். விவாதத்தின் போது DOTயின் அறிவுறுத்தல் காரணமாக தேர்வு நடைமுறைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. மேலும் மத்திய தொலை தொடர்பு அமைச்சரின் அலுவலகத்தில் இருந்து வந்த அறிவுறுத்தலின்படியே DOT இந்த தேர்வு நடைமுறைகளை நிறுத்தி வைத்துள்ளதாக வேறு பல செய்திகள் மூலமாக தெரிய வருகிறது. முதன் முறையாக ஒரு கேடருக்கான தேர்வு நடைமுறைகள் மத்திய தொலை தொடர்பு அமைச்சரின் தலையீட்டின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பது ஆச்சர்யத்தை தருகிறது. இது BSNLன் செயல்பாட்டில் தலையிடுவதாகும். இதுவரை BSNLல் நடைபெற்ற எல்லா தேர்வுகளும், (இலாகா தேர்வானாலும் சரி, நேரடி நியமனமாக இருந்தாலும் சரி) எந்த ஒரு ஊழலுக்கும் இடமின்றி நடைபெற்று வந்துள்ளது. இன்றைக்கு நாடு முழுவதும் வியாபித்துள்ள ஊழல் இதுவரை BSNLல் இல்லையென்று இறுமாப்புடன் இருந்து வந்தோம். ஆனால் தற்போது BSNLலிலும் அரசியல் தலையீடு துவங்கி விட்டது போல் தெரிகிறது. எனவே நியாயமான முறையில் நியமனங்கள் நடைபெறுவதற்காக BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து போராடும்.

**BSNL சிம்கார்டில் OFF-NET வசதி:-** OFF-NET வசதி நீட்டிப்பது தொடர்பான பிரச்சனையில் ஏற்பட்டு வரும் அதீத காலதாமதம் தொடர்பாக அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS, ஆகியோர் GM(Admn) திரு S.K.சின்ஹா அவர்களை 07.12.2016 அன்று சந்தித்து பேசினர். இது தொடர்பாக பலமுறை நமது சங்கம் நேரடியாக பேசியதையும், கடிதம் கொடுத்துள்ளதையும் நமது தலைவர்கள் அவரிடம் தெரிவித்தனர். OFF-NET வசதி நீட்டிப்பதற்கான கோப்பு நிர்வாகக் குழுவிற்கு சென்றுள்ளதாகவும் விரைவில் அதற்கான உத்தரவு வெளியிடுவதாகவும் GM(Admn) உறுதி அளித்துள்ளார்.

**JTO LICE தேர்வு தேதி மாற்றப்படமாட்டாது:-** 07.12.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS, ஆகியோர் GM(Rect & Trg) திருமிகு அனிமா ராய் அவர்களை சந்தித்து 11.12.2016 அன்று நடைபெற உள்ள JTO LICE தேர்வு தொடர்பாக விவாதித்தனர். தேர்வு தள்ளி வைப்பதற்கான வாய்ப்பு உள்ளதா என்கின்ற நமது தோழர்களின் கேள்விக்கு, நிர்ணயம் செய்யப்பட்டுள்ள 11.12.2016 அன்றே தேர்வு நடைபெறும் என்றும் தேர்வு தள்ளிவைக்கப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

**தேர்வுகளின் மறு பரிசீலனை:-** 24.09.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மனித வள இயக்குனருக்கு BSNL ஊழியர் சங்கம் மீண்டும் 06.12.2016 அன்று ஒரு கடிதம் எழுதியுள்ளது.

தேர்வு எழுதியவர்களிடம் இருந்து கிடைக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் 17.07.2016 அன்று நடைபெற்ற JAO LICE தேர்வுகளின் முடிவுகளை பரிசீலனை செய்ய நிபுணர் குழு ஒன்றை BSNL நிர்வாகம் நியமித்துள்ளது. மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நமது மத்திய சங்கம் போதிய விவரங்களுடன் கடிதம் ஒன்றை ஏற்கனவே கொடுத்துள்ளது. 07.12.2016 அன்று மீண்டும் ஒரு கடித்தத்தை நமது மத்திய சங்கம் எழுதியுள்ளது.

**ஊதிய மாற்றத்திற்கான பேச்சு வார்த்தைக் குழு அமைத்திடுக:-** அதிகாரிகளுக்கான மூன்றாவது ஊதிய மாற்றக் குழு அமைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. பேச்சு வார்த்தையை துவங்குவதற்கான அனுமதி இன்னமும் DPE வழங்கவில்லை என்ற காரணத்தைச் சொல்லி நிர்வாகம் இந்த பிரச்சனையை இழுத்தடிக்கிறது. DPEயிடம் இருந்து அனுமதி வந்தவுடனேயே பேச்சு வார்த்தையை துவங்குவதற்கு வசதியாக குறைந்த பட்சம் ஒரு கூட்டுக் குழுவையாவது நிர்வாகம் அமைக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**நவம்பர் மாதத்தில் BSNL நிறுவனம் 16,64,349 இணைப்புகளை வழங்கியுள்ளது:-** நவம்பர் 2016ல் BSNL நிறுவனம் 16,64,349 புதிய மொபைல் இணைப்புகளை வழங்கியுள்ளது. ரிலையன்ஸ் ஜியோ நுழைவிற்கு பிறகும் ஒரு மாதத்தில் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட இணைப்புகளை BSNL நிறுவனம் கொடுத்துள்ளது என்பது பாராட்டத்தக்கது. ஆனாலும் இது அக்டோபர் 2016ல் கொடுக்கப்பட்ட 20 லட்சம் இணைப்புகளிலிருந்து குறைவு தான். 1,83,702 புதிய இணைப்புகளை கொடுத்து தமிழகம் முதலிடத்தை பிடித்துள்ளது. ஆனாலும் அதுவும் கொடுக்கப்பட்ட இலக்கை அடையவில்லை. டிசம்பர், 2016ல் 23,10,000 புதிய இணைப்புகளை தரவேண்டும் என்கின்ற இலக்கை அடைவதற்கு அனைத்து மட்டங்களிலும் நமது சங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**BSNL அறிமுகம் செய்யும் 149ரூபாய்களுக்கு 300 MB டேட்டா மற்றும் வரம்பற்ற இலவச அழைப்புகள் என்கின்ற புதிய திட்டம்:-** ரிலையன்ஸ் ஜியோவின் சவாலை சந்திக்க மாதம் ஒன்றிற்கு 149 ரூபாய்க்கான புதிய திட்டத்தை BSNL கொண்டு வர உள்ளது. இதில் தங்களை பதிவு செய்து கொள்ளும் வாடிக்கையாளர்கள் 300 MB டேட்டாவுடன் எல்லாவிதமான நெட்வொர்க்களில் உள்ள தொலைபேசிகளுடன் வரம்பில்லாமல் பேசிக் கொள்ளலாம். இது 2017 ஜனவரி முதல் வெளி வர உள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**